





# ஆசிரியர் கையேடு

## அனைத்து வயதினருக்கும்

# துப்பறிவாளர்கள்

## உங்கள் பூதக் கண்ணாடியையும் குறியீடு மாற்றியையும் எடுத்துக்கொள்ளவும்.

ஏனெனில்... இது தேவனுடைய வார்த்தைக்குள்ளாகக்... **கடந்து செல்லும் நேரம்!**

பல்லாண்டுகளுக்குமுன் இந்த ஊழியத்தைத் தொடங்கும்போது எழுதிய ஞாயிறு பாடத்திட்டத்தை திரும்ப எழுதி புதுப்பிப்பது மிகவும் சிலிர்க்கச் செய்வதாயுள்ளது. மின் வசதியோ, மரங்களோ இல்லாத உப்புத்துகள் படிந்த மெக்ஸிகோவின் சொனோரா என்ற இடத்தில் அமைந்த எங்கள் Trailer வீட்டில் நாங்கள் வசித்த முதல் ஆண்டு அது. ஆனால் அங்குதான் இந்தப் பாடப்பகுதி உருவானது. பாடத்தொகுப்பின் கடைசிப் பகுதியை நான் எழுதி முடிக்கும்போது, சிறுவருக்குள் நடைபெறும் ஊழியத்திற்கான பாடங்களைத் தொடர்ந்து எழுதும்படி தேவன் பேசினார். கிறிஸ்துவின் அங்கத்தினருக்கு குறைந்த விலையில் பாடப்பகுதிகளை அளித்து வரும் தலைமுறையினர் அர்ப்பணிப்புடன் கிறிஸ்துவைப் பின்பற்றுவோராயிருக்கச் செய்வதே எனது ஊழிய அழைப்பின் நோக்கமாகும். முந்தின பாடப்பகுதிகளினின்று சற்று வித்தியாசமாக இதை தயாரித்துள்ளோம். சில புதிர்கள் கைவேலைகளுண்டு. அத்துடன், முதன்முறையாகச் சிறுவர்களுக்கு வியப்பளிக்கும்படியாக வாரத்திற்குரிய இரகசிய செய்தியும் குறி விலக்கியும் இணைக்கப்பட்டுள்ளது. முப்பது சபைகளில் தொடங்கப்பட்ட இவ்வூழியம் நூறாக வளர்ந்து, தற்போது ஆயிரமாக உலகெங்கும் பரந்து விரிந்துள்ளது. இதற்கென என்னை அழைத்து உற்சாகப்படுத்திய தேவனைத் துதிக்கிறேன். மேலும் என்னில் வைத்த அழைப்பிற்கு என்னைக் கீழ்ப்படிய வைத்த ஆண்டவருக்கு நன்றி கூறுகிறேன்.

மத்தேயு நற்செய்தி நூலில் கூறப்பட்டுள்ள உவமைகள் எனக்கு எப்போதுமே மிகவும் பிடித்தமானவை. ஒரு வகையில் எங்கள் பாடங்கள் மிக எளிமையாயிருப்பினும், இயேசு கூறின உவமைகள் அத்தனை எளிதானவையன்று. தம்மிடம் வந்த கூட்டத்தினருக்கு இவ்வுவமைகளை இயேசு கூறி, அவற்றின் விளக்கங்களை அவர்களாகவே விளங்கிக் கொள்ளும்படி விட்டுவிட்டார்; தமது சீஷருக்கோ அவற்றை விளக்கி காண்பித்தார்.

ஆசிரியர்களாகிய நீங்கள் உங்கள் மாணவர்களே கற்பனை செய்து அவர்களாகவே உண்மைகளை ஆராய்ந்து அறியவும் ஊக்குவிக்கப் போகிறீர்கள். இந்த 13 வாரங்களுக்குள் ஒவ்வொரு உவமை மூலமும் இயேசு எதை வலியுறுத்தினார் என்பதை அவர்கள் கண்டு கொள்வார்கள். எவ்வளவுக்கதிகமாக மாணவர் தாங்களாகவே கருத்தைக் கண்டுபிடிக்க அவர்களைத் தூண்டுவீர்களோ அவ்வளவாக அவர்கள் ஒவ்வொரு பாடத்தின் மூலமும் அறிவைப் பெற்றுக்கொள்வார்கள்; விரைவிலேயே பாடத்திலுள்ள இரகசிய செய்தியை விளங்கிக்கொள்வார்கள்.‘தேவனுடைய ராஜ்யம் உங்கள்...

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| உ | ங் | க | ள் | இ | ரு | த | ய | த் | தி | லே | ல |
| 1 | 2 | 3 | 4 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |

உள்ளது’ என்பதே அச்செய்தியாகும்.



www.ChildrenAreImportant.com – Children’s ministry resources, Sunday School, and Vacation Bible School (VBS) curriculum for churches and teachers. Tamil

# இப்பாடப் பகுதியின் உள்ளடக்கம் 'துப்பறிவாளர்கள்: தேவனுடைய இராஜ்ஜியத்தை வேவு பார்த்தல்' - இப்பாடங்கள் நற்பலன் தர பலவித உபகரணங்களை பயன்படுத்துகிறீர்கள்.



## ஆசிரியருக்காக

முக்கியப்பாடப்பகுதிகளும், ஆலோசனைகளும், ஆசிரியர்கள்வகுப்பில் முக்கியத்துவம் கொடுக்க வேண்டுபவைகள்.

## விளையாட்டு

உலகெங்குமுள்ள மாணவர்களில் 90 பேர் வகுப்பறைகளில் சலிப்புடன் இருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. மாணவர்கள் சலிப்படையாதிருக்க விளையாட்டுகள் உதவுகின்றன. விளையாடும்போது அவர்கள் இங்குமங்கும் அசைவதோடு, பாடத்தையும் கற்றுக்கொள்ள முடியும்.

## பாட உதவிகள்

வாரந்தோறும் வீட்டிலிருந்து நீங்கள் கொண்டுவரும் பொருட்கள் உங்கள் பாடப்பகுதியின் சுவையை மிகைப்படுத்தும்.

## கேள்விகள்

உயர்வகுப்பு மாணவருக்கு கேள்விகள் கொடுக்கப்பட்டுள்ளன. உவமைகளை அவர்கள் எவ்வளவாகப் புரிந்து கொண்டுள்ளனர் என்பதை அறிய உதவுகின்றன.

## விடைகள்

மாணவர்களின் புத்தகத்தின் ஒவ்வொரு பாடத்தின் வலப்புற பக்கங்களில் கேள்விகளுக்கான விடைகள் கொடுக்கப்பட்டுள்ளன.

## இரகசிய செய்தியும் குறிவிலக்கியும்

மாணவர் புத்தகத்தில் ஒவ்வொரு பாடத்திலும் இரகசிய செய்தி உள்ளது. குறிவிலக்கி திறவுகோல் மாணவர் புத்தகங்களின் (பெரிய மாணவர்களுக்கு மட்டும்) கடைசி பக்கத்தில் உள்ளது. கத்தரிக்கோலால் திறவுகோல் பகுதியை வெட்டி எடுக்கவும். 13 வாரங்களிலும் அவ்வாறு செய்யவும். அது 3 மாதம் பத்திரமாயிருக்கும்படி கண்ணாடித்தாளால் புத்தகத்தை அலங்கரிக்கவும். சிறுவர்கள் அதை வீட்டிற்குக் கொண்டு செல்ல அனுமதிக்க வேண்டாம். ஏனெனில் அது 13 வாரமும் பயன்பாட்டிலிருக்க வேண்டிய ஒன்று.




இரகசிய செய்தியை அறிய திறவுகோலிலிருந்து நீங்கள் எதிர்நோக்கும் படத்தை நோக்கி அம்புக்குறியிடவும் (வலப்புறமுள்ள மாதிரியை நோக்கவும்) உங்கள் மாணவரின் புத்தகத்திலுள்ள அம்புக்குறி விடையைச் சுட்டிக்காட்டும்.

**சொற்றொடரைக் கண்டுபிடித்தல்**

ஒவ்வொரு பாடத்தின் ஒவ்வொரு பக்கத்திலும் ஒரு எழுத்து மறைந்துள்ளது. சிறுவர்கள் அந்த எழுத்தைக் கண்டு பிடித்ததும் தங்கள் திறவுகோல் மூலம் குறியீடு செய்து கொள்ள வேண்டும். பின்னர் முதல் பக்கத்திலுள்ள அடைப்பு பெட்டியில் அந்த எழுத்தை எழுதி வைக்க வேண்டும். ஒவ்வொரு வாரமும் சொற்றொடரின் ஒவ்வொரு எழுத்தும் சேர்ந்து, 13 வாரத்தில் (3 மாதத்தில்) விடையாகிய சொற்றொடர் கண்டுபிடிக்கப்படும்... 'உங்கள் இருதயத்திலே.'

## மாணவர் புத்தகம்

மாணவரின் கவனத்தை ஈர்க்கவும் பாட நேரங்களை கவர்ச்சிகரமாக்கவும் புத்தகம் உறுதுணையாயுள்ளன. புத்தகத்தில் பின்கண்ட பயிற்சிகள் உள்ளன.

வேதாகமப் பகுதி - மாணவர் கையெட்டிலே வேதாகமப் பகுதி எழுதப்பட்டுள்ளது. எனவே வகுப்பிலுள்ள அனைவரும் அதை வாசிக்க முடியும்.

மனப்பாட வசனம்.

புதிர்

இரகசிய செய்தி (பெரிய மாணவருக்கு மட்டும்) - குறிவிலக்கியைப் பற்றிய குறிப்புகளைப் பின்பற்றி ஒவ்வொரு வாரமும் பயன்படுத்தவும். ஒவ்வொருவருக்கும் குறிவிலக்கி உள்ளதா என்பதை கவனிக்கவும்.

மத்தேயு நற்செய்தி நூலை வாசித்தல் (பெரிய மாணவர் மட்டும்) - வேத புத்தகத்தை இன்னும் அதிகமாக வாசித்தறிவதற்கென இப்பயிற்சி அளிக்கப்படுகிறது. வாரத்திற்கு 2, 3 அதிகாரங்கள் அடங்கும்படி மத்தேயு நற்செய்தி நூல் பகுக்கப்பட்டுள்ளதால் 13 வாரங்களுக்குள் இந்த நூலை வாசித்து முடிக்க முடியும். இவ்வாறு வாசிக்க மாணவர்களை ஆசிரியர் ஊக்குவிக்க வேண்டும்.

## வெட்டி ஒட்டுதல்

ஸ்டிக்கர்கள் சிறுவர்களுக்குப் பிரியம்! எனவே வாரந்தோறும் ஸ்டிக்கர்களை வெட்டி ஒ ட்டும் பயிற்சி அளிக்கப்படுகிறது. புள்ளியிட்ட பகுதிக்குள் படங்கள் ஒட்டப்பட்டு, வண்ணம் தீட்டப்பட வேண்டும்.



# துப்பறிவாளர்கள்

## தேவனுடைய இராஜ்ஜியத்தை வேவு பார்த்தல்

1

**காலடிச்சுவடு 1**



**விதைக்கிறவன்**

**மனப்பாட வசனம் :**
"நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவனோ, வசனத்தைக் கேட்கிறவனும் உணருகிறவனுமாயிருந்து, நூறாகவும் அறுபதாகவும் முப்பதாகவும் பலன் தருவான் என்றார்." மத்தேயு *13:23*

2

**காலடிச்சுவடு 2**



**களைகள்**

**மனப்பாட வசனம் :**
"மனுஷகுமாரன் தம்முடைய தூதர்களை அனுப்புவார்; அவர்கள் அவருடைய ராஜ்யத்தில் இருக்கிற சகல இடறல்களையும் அக்கிரமஞ்செய்கிறவர்களையும் சேர்த்து... அப்பொழுது, நீதிமான்கள் தங்கள் பிதாவின் ராஜ்யத்திலே சூரியனைப்போலப் பிரகாசிப்பார்கள். கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக்கடவன்." மத்தேயு *13:41, 43*

3

**காலடிச்சுவடு 3**



**கடுகு விதை**

**மனப்பாட வசனம் :**
"...பரலோகராஜ்யம் கடுகுவிதைக்கு ஒப்பாயிருக்கிறது; அதை ஒரு மனுஷன் எடுத்துத் தன் நிலத்தில் விதைத்தான். அது சகல விதைகளிலும் சிறியதாயிருந்தும், வளரும்போது, சகல பூண்டுகளிலும் பெரியதாகி..." *மத்தேயு 13:31-32*

4

**காலடிச்சுவடு 4**



**ஈஸ்ட்**

**மனப்பாட வசனம் :**
"பரலோகராஜ்யம் புளித்தமாவுக்கு ஒப்பாயிருக்கிறது." மத்தேயு 13:33

5

**காலடிச்சுவடு 5**



**புதைத்திருக்கிற பொக்கிஷமும் நல்ல முத்தும்**

**மனப்பாட வசனம் :**
"அவன் விலையுயர்ந்த ஒரு முத்தைக்கண்டு, போய், தனக்குண்டான எல்லாவற்றையும் விற்று, அதைக் கொள்ளுகிறான்." மத்தேயு *13:45-46*

6

**காலடிச்சுவடு 6**



**காணாமற் போன ஆடு**

**மனப்பாட வசனம் :**
"இவ்விதமாக, இந்தச் சிறியரில் ஒருவனாகிலும், கெட்டுப்போவது பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவின் சித்தமல்ல.'மத்தேயு *18:14*



www.ChildrenAreImportant.com – Children's ministry resources, Sunday School, and Vacation Bible School (VBS) curriculum for churches and teachers. Tamil

7

காலடிச்சுவடு 7



இரக்கமற்ற ஊழியக்காரன்

**மனப்பாட வசனம் :**

"அப்பொழுது அவனுடைய ஆண்டவன் அவனை அழைப்பித்து: பொல்லாத ஊழியக்காரனே, நீ என்னை வேண்டிக்கொண்டபடியினால் அந்தக் கடன் முழுவதையும் உனக்கு மன்னித்துவிட்டேன். நான் உனக்கு இரங்கினதுபோல, நீயும் உன் உடன்வேலைக்காரனுக்கு இரங்கவேண்டாமோ என்று சொல்லி,"மத்தேயு *18:32-33*

8

காலடிச்சுவடு 8



வேலையாட்கள்

**மனப்பாட வசனம் :**

"பிந்தினோர் முந்தினோராயும், முந்தினோர் பிந்தினோராயும் இருப்பார்கள்;"
மத்தேயு *20:16*

9

காலடிச்சுவடு 9



இரண்டு குமாரர்கள்

**மனப்பாட வசனம் :**

"ஏனென்றால், யோவான் நீதிமார்க்கமாய் உங்களிடத்தில் வந்திருந்தும், நீங்கள் அவனை விசுவாசிக்கவில்லை." மத்தேயு 21:32

10

காலடிச்சுவடு 10



குத்தகையாளர்கள்

**மனப்பாட வசனம் :**

"ஆகையால், தேவனுடைய ராஜ்யம் உங்களிடத்திலிருந்து நீக்கப்பட்டு, அதற்கேற்ற கனிகளைத் தருகிற ஜனங்களுக்குக் கொடுக்கப்படும்."
மத்தேயு *21:43*

11

காலடிச்சுவடு 11



கலியாண விருந்து

**மனப்பாட வசனம் :**

"ஆகையால், நீங்கள் வழிச்சந்திகளிலே போய், காணப்படுகிற யாவரையும் கலியாணத்திற்கு அழைத்துக்கொண்டுவாருங்கள் என்றான்.அந்த ஊழியக்காரர் புறப்பட்டு, வழிகளிலே போய், தாங்கள் கண்ட நல்லார் பொல்லார் யாவரையும் கூட்டிக்கொண்டுவந்தார்கள்; கலியாணசாலை விருந்தாளிகளால் நிறைந்தது." மத்தேயு *22:9-10*

12

காலடிச்சுவடு 12



பத்து கன்னிகைகள்

**மனப்பாட வசனம் :**

"மனுஷகுமாரன் வரும் நாளையாவது நாழிகையையாவது நீங்கள் அறியாதிருக்கிறபடியால் விழித்திருங்கள்."
மத்தேயு *25:13*

13

காலடிச்சுவடு 13



தாலந்துகள்

**மனப்பாட வசனம் :**

"அவனுடைய எஜமான் அவனை நோக்கி: நல்லது, உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய், அநேகத்தின்மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன், உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி என்றான்." மத்தேயு *25:21b*

# 1 விதைக்கிறவன்

**வேதாகமப் பகுதி :** மத்தேயு 13:3-23
**மனப்பாட வசனம் :**“நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவனோ, வசனத்தைக் கேட்கிறவனும் உணருகிறவனுமாயிருந்து, நூறாகவும் அறுபதாகவும் முப்பதாகவும் பலன் தருவான் என்றார்.” மத்தேயு *13:23*
**வீட்டுப் பாடம் அதிகாரங்கள்:** கடினமானது - மத்தேயு 2
மிகவும் கடினமானது - மத்தேயு 1-3

### பாட நேரத்தை திட்டமிடுதல்

1. வகுப்பு தொடங்கும்போது பாட உதவி காண்பிக்கவும்.
2. முக்கியப் பாடம்
கதை சொல்லி, நடித்து, மனப்பாட வசனம் கற்று தந்து, மாணவர் மனப்பாட வசனத்தை மனனம் செய்தல்.
3. மனப்பாட வசனத்தை விளையாட்டுடன் இணைத்து மனனம் செய்ய வைத்தல்.
4. மாணவர் புத்தகங்கள்
5. இரகசிய செய்தி (பெரியோர்க்கு)
ஸ்டிக்கர்ஸ் (சிறுவருக்கு)
6. வீட்டுப் பாடமாக வேதாகமப் பகுதி வாசித்தல்.

## முக்கிய பாடம்

இந்த உவமையானது பரலோக ராஜ்த்தைக்குறித்த பலதரப்பட்ட மக்களின் பதில்களைப் பற்றியது. வேதாகமத்தின் செய்தி ஒரே மாதிரியானதே. ஆனால் ஒவ்வொருவரும் வெவ்வேறு விதத்தில் பதில் கொடுக்கின்றனர். இவ்வதிகாரத்தின் பின்பகுதியில் இந்த உவமையை இயேசு விளக்கியுள்ளார். வழியருகே விதைக்கப்பட்ட விதையைப் பொறுக்குகிற பறவைகள் சாத்தானைக் குறிக்கும். கற்பாறை நிலத்தில் விழுந்து வேர்கொள்ள முடியாமற் போகிறவைகள், வசனத்தைச் சந்தோஷமாக ஏற்றுக்கொள்வதையும், வாழ்நாள் முழுவதம் காக்கக் கூடாமற் போவதையும் குறிக்கின்றது. முள்ளுகள் உலகக் கவலையையும் ஐசுவரியத்தையும் குறிக்கும்; வசனம் பலன் கொடாமற் போகப்பண்ணும்; நெருக்கிப்போடும். இறுதியில் கூறப்பட்ட நல்ல நிலம் போன்றவன் வசனத்தைக் கேட்டு, புரிந்து கொள்பவன். இது உங்கள் வாழ்வில் நன்மையை விளைவிக்கிறது. 30, 60, 100 ஆக பலன் அளிக்கிறது. இதுவே வெற்றியுள்ள வாழ்க்கை. உங்களில் எத்தனை பேர் இப்படியிருக்க விரும்புகிறீர்கள்? சரி! இப்போது உங்களுக்கு ஒரு தருணம் அளிக்கப்படுகிறது. பரலோகம் பற்றிய வார்த்தைகளை நீங்கள் கேட்கவும் அதைப் புரிந்து கொள்ளவும் தேவன் விரும்புகிறார். இப்பாடங்களில் பரலோக ராஜ்யம்பற்றிய உவமைகளை நாம் படிக்கப் போகிறோம். இவற்றை கவனித்து புரிந்து கொள்ள வேண்டும். தேவனின் வசனத்தைக் கவனமாகக் கேட்க உங்கள் இருதயத்தை ஆயத்தமாக்கிக் கொள்ளுங்கள். உங்கள் இருதயம் நல்ல நிலமாக இருக்கட்டும். நாம் எவ்வாறு நல்ல நிலமாயிருக்க முடியும்? இந்த உவமையைப் பாருங்கள். நீங்கள் நிலத்தில் ஊன்றப் பட்டிருக்கிறீர்களா என்பதை உறுதி செய்து கொள்ளுங்கள். (நீங்கள் போதனையை புரிந்து கொண்டீர்களா என்பதை உறுதி செய்து கொள்ளுங்கள்). உங்கள் வேர்கள் ஆழத்தில் சென்றுள்ளதா என்றும் சரி பார்த்துக் கொள்ளுங்கள் (உபத்திரவம் வரும்போது உங்கள் தீர்மானங்களில் வழுவிவிடாமல் திடமனதுடன் இருங்கள்). நீங்கள் முட்புதர்களால் நெருக்கப்படாதிருக்கிறீர்களா என்பதை உறுதிபடுத்திக் கொள்ளுங்கள் (உலக வாழ்வுக்காகவும் பணத்துக்காகவும் பாரமடையாதிருக்கப் பழகுங்கள்). இப்படியே நற்பலன் பெற நீங்கள் ஆயத்தமாக வேண்டும். நாம் ஒவ்வொருவரும் ஆவியின் கனியுள்ளோராய் இருக்க வேண்டுமென தேவன் விரும்புகிறார். ஆனால், உங்கள் அறுவடை எவ்வாறிருக்கிறது? விதைத்ததில் 30, 60, 100 ஆக பலன் கொடுக்க விரும்புகிறீர்களா?

## பாட உதவி



வாழ்க்கை ஒரு ஒலிநாடா பெட்டி போன்றது. நீங்கள் பார்க்கும் கேட்கும் காரியமே சொல்லாக செயலாக வெளிவருகின்றது. உங்கள் கைபேசியிலோ ஒலிநாடாவிலோ பிள்ளைகளின் குரலைப் பதிவு செய்யவும். பின்னர் அவர்களே அதைக் கேட்கும்படி இயக்கவும். நாம் ஒலிப்பதிவு செய்யும் கருவி போன்றோர். அதனால் நாம் கேட்கிறவைகளைக் குறித்தும், அதை பயன்படுத்துவதைக் குறித்தும் எச்சரிக்கையுள்ளோராய் இருக்க வேண்டும் என சிறுவர்களிடம் கூறவும்.

## கேள்விகள்

இவ்வுவமையில் நிலம் எதற்கு ஒப்பிடப்பட்டுள்ளது? (இருதயத்திற்கு)

உங்கள் அருஞ்செயலை தடுத்துப் போடக் கூடிய ஒரு காரியம் எது? (பண ஆசை, உலக ஆசை)

நீங்கள் நேரம், பணம் இவற்றை கர்த்தருக்கென செலவிட்டு 30, 60, 100 ஆக பலன் தர என்ன தேவை? (உங்கள் உள்ளத்தை “நல்ல நிலமாகக்” காத்துக் கொள்ளுதல்)

நல்ல நிலமாக மாற நமக்கு தேவையான முதற் காரியம் என்ன? (வேதாகமத்தின் போதனைகளைச் சரியான முறையில் விளங்கிக் கொள்ளுதல்)

கர்த்தரின் காரியத்தில் வெற்றி பெற முயற்சி செய்வது சரிதானா? (ஆம், ஆவிக்குரியோராய் இருக்க வேண்டும் என வேதாகமம் கூறுகிறது. நாம் ஓட்டப்பந்தயம் ஓடுவதாகவும், வெற்றி பெற ஓடும்படியும் வேதாகமம் போதிக்கிறது.1 கொரிந்தியர் 9 : 24-27)



www.ChildrenAreImportant.com – Children's ministry resources, Sunday School, and Vacation Bible School (VBS) curriculum for churches and teachers. Tamil

# விளையட்டு



**தேவையான பொருட்கள்:**
கயிறு, தட்டுகள்
**ஆயத்தம்:**
ஒரு கோடு உண்டாகும்படி கயிற்றை பயன்படுத்தவும். கோடு தொடங்கிய இடத்தில் முடியவும். 10 பேருக்கு அவ்வாறு ஒரு கோடு ஆயத்தம் செய்யவும்.

**விளையாடும் விதம்.**
1. 10 பேர் அடங்கிய குழு வரிசையில் நிற்க வேண்டும். வரிசையின் முதலில் நிற்போர் கையில் 2 தட்டுகள் கொடுக்கப்படும். அவர்கள் அந்தத் தட்டின் மீது நிற்பார்கள்.
2. விளையாட்டைத் தொடங்கியதும், முதல் நபர் கோட்டின் மேலேயே நடக்க வேண்டும். நடக்கும்போது எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியிலும் காலின்கீழ் தட்டு இருக்க வேண்டும். தொடங்கின இடத்திற்கு அவர் வந்து சேர்ந்ததும், அடுத்தவர் அந்த தட்டுகளை வாங்கி அவ்வாறே நடப்பார். 10 பேரும் நடந்ததும் ஆட்டம் முடியும்.

**கூடுதலான ஆலோசனைகள்**
1. சில சிறுவர்கள் நடந்த பின்னர் கயிறை மாற்றிக் கொள்ளலாம்.
2. தேவைப்பட்டால் புது தட்டுகள் கொடுக்கலாம்.
3. ஒரு வசனத்தின் ஒவ்வொரு வார்த்தைகளை தனித்தனி அட்டைகளில் எழுதி கோட்டின் மேல் வரிசை குழப்பி வைக்கவும். சிறுவர்கள் கோட்டின் மீது நடந்து கொண்டே வார்த்தைகளடங்கிய அட்டைகளை எடுத்து பின் வரிசைப்படுத்தலாம்.

# விடைகள்

வார்த்தை விளையாட்டு

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| உ | ெ | ச | டி | க | ள் | ப | ே | ா | த | நி | ல | ம் |
| எ | ந | பு | ரி | ந் | து | ெ | க | ா | ள் | ளு | த | ல் |
| இ | ரு | த | ய | ம் | வ | ா | ட் | ப | வி | ம | ட | உ |
| ெ | க் | வி | வ | ச | ா | யி | ப | ற | ை | வ | க | ள் |
| ே | கு | ா | க | தி | ர் | ந | து | ர | த | ழி | சூ | மு |
| அ | த | த | னி | ம | த் | ச | வ | ல | த் | யீ | ரி | ற் |
| ந | ல் | ல | ப | வி | ை | த | க | ள் | த | ன | ய | க |
| ன | க | வ | ள | ர் | த | ல் | ை | டி | ல் | க | ன் | ள் |

## நடுநிலையானது

வார்த்தை விளையாட்டு

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| உ | எ | ெ | மு | ள் | ன | ெ |
| வி | ை | த | ே | அ | க | ச |
| ை | ந | க | சூ | ரி | ய | ன் |
| த | ச | ப | ா | த | ம | ற |
| த் | வ | ே | க | ட் | ப | து |
| த | ா | வ | ழி | ே | அ | ன |
| ல் | த | ர் | உ | எ | ெ | ே |




## மிகவும் கடினமானது

இரகசிய தகவல்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ே | த | வ | னு | ை | ட | ய |

உ

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வ | ா | ர் | த் | ை | த |

| | | | |
|---|---|---|---|
| எ | ன் | னி | ல் |

| | | |
|---|---|---|
| வ | ள | ர |

| | | |
|---|---|---|
| ந | ா | ன் |

| | |
|---|---|
| எ | ன் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| இ | ரு | த | ய | த் | ை | த |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ப | ர | ா | ம | ரி | த் | து | க் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ெ | க | ா | ள் | ே | வ | ன் |

## கடினமானது

இரகசிய தகவல்

| | | |
|---|---|---|
| ந | ா | ன் |

| | |
|---|---|
| எ | ன் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| இ | ரு | த | ய | த் | ை | த |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ப | ர | ா | ம | ரி | த் | து | க் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ெ | க | ா | ள் | ே | வ | ன் |

வார்த்தை விளையாட்டு

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| உ | எ | ெ | மு | ள் | ன | ெ |
| வி | ை | த | ே | அ | க | ச |
| ை | ந | க | சூ | ரி | ய | ன் |
| த | ச | ப | ா | த | ம | ற |
| த் | வ | ே | க | ட் | ப | து |
| த | ா | வ | ழி | ே | அ | ன |
| ல் | த | ர் | உ | எ | ெ | ே |

## எளிதானது

மாணவர்கள் அந்த வாரத்திற்குரிய ஸ்டிக்கரை வெட்டி எடுக்கவும். பின்னர் ஸ்டிக்கரை அந்த வாரத்திற்குரிய பாடப்பகுதியில் புள்ளியிடப்பட்டு குறிக்கப்பட்ட இடத்தில் ஒட்டவும். முழு பக்கத்தையும் வர்ணம் தீட்டவும்.



# 2 களைகள்




**வேதாகமப் பகுதி:** மத்தேயு 13:24-30
**மனப்பாட வசனம்:** "அவர்கள் அவருடைய ராஜ்யத்தில் இருக்கிற சகல இடறல்களையும் அக்கிரமஞ்செய்கிறவர்களையும் சேர்த்து, அப்பொழுது, நீதிமான்கள் தங்கள் பிதாவின் ராஜ்யத்திலே சூரியனைப்போலப் பிரகாசிப்பார்கள். கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக்கடவன்" மத்தேயு *13:41, 43a*
**வீட்டுப் பாடம் அதிகாரங்கள்:** கடினமானது - மத்தேயு 4
மிகவும் கடினமானது - மத்தேயு 4-6

## முக்கிய பாடம்

இதே அதிகாரத்தின் பின் பகுதியில் இயேசுதாமே களைகளைப்பற்றிய உவமையின் நல்ல விளக்கத்தினை அளித்துள்ளார். இந்த உவமையில் எல்லா மனிதரைக் குறித்தும் கூறியுள்ளார்.
மத்தேயு 13:37-43
உலகத்தில் தீய மனிதர்கள் இருக்கின்றார்கள் என்பதை இந்த உவமை கூறுகின்றது. நம்மைச் சுற்றிலும் எப்போதும் கெட்ட காரியங்கள் நடப்பதை நானும் நீங்களும் காண்கிறோம். பள்ளியில் தேர்வு நேரங்களில் ஏமாற்றும் சிறுவர்கள், சபை காரியங்களில் பொய் பேசும் நண்பர்கள், தாங்கள் விரும்புவதைப் பெறுவதையே நோக்கமாகக் கொண்டிருப்பவர்களை பார்க்கிறோம். இவ்வித செயல்களைச் செய்வோர் கண்டுபிடிக்கப்படாமலும் தண்டிக்கப்படாமலுமிருப்பதைப் பற்றித் திகைக்கிறோம். ஆனால் தேவன் அனைத்திற்கும் பொறுப்பானவர் என்பதும், அனைத்தையும் காண்கிறார் என்பதும் இவ்வுவமை மூலம் நாம் அறியும் நல்ல செய்தியாகும். தேர்வில் ஏமாற்றி பிடிபடாமலும் தண்டனை பெறாமலும் இருக்கும் மாணவன் எந்த நாளும் அப்படியே இருந்துவிட முடியாது. தேவன் நன்மை செய்வோரையும் தீமை செய்வோரையும் ஒருமிக்க வாழவிட்டு தீமை செய்வோருக்குத் தண்டனை பிற்பாடு கொடுப்பார் என்று இயேசு கூறுகிறார். எனவே தேவன் அனைத்தையும் காண்கிறார் என்பதாலும் நமது கிரியைக்குத் தக்க பலன் அளிப்பார் என்பதாலும் பொறுமையாக இருப்போம். நீங்கள் கோதுமை மணியா அல்லது களையா என்பது தேவனுக்குத் தெரியும்.

## பாட உதவி

ஹீலியம் வாயு நிரப்பப்பட்ட பலூன் நூலில் கட்டப்படவும். பலூனுக்குப் பெயர் கொடுக்கவும். ஒரு அறைக்குள் அதைப் பறக்கவிடவும். எடுத்துக்காட்டாக, ரம்மியா தப்பிக் கொண்டாள் என்று சிறுவர்களிடம் கூறுங்கள். நாமனைவரும் சிலவேளைகளில் இந்த பலூனைப்போல் தவறாக நடக்கிறோம். ஆனால் தேவன் நம்மை அவரண்டை இழுத்துக் கொள்ளுகிறார். (பலூன் கட்டின நூலைப் பிடித்து இழுக்கவும்). மீண்டும் பலூனை விட்டுவிடவும். அது மேலேயே நிற்கும்படி விட்டுவிடவும். தேவன் நம்மை விட்டுவிடுவாரா என்று சிறுவரிடம் கேட்கவும். 'இல்லை!' என்பதே பதிலாகும்.

## கேள்விகள்

சென்ற வாரம் நீங்கள் பார்த்த ஒரு நபர் தவறிழைத்து பிடிக்கப்படாதிருந்ததான நிகழ்வை எடுத்துக்காட்டாகக் கூறுக.
அவர்கள் இழைத்த தவற்றிற்கு எப்போது தண்டனை பெறுவர்? (உலகத்தின் முடிவில்)
உலகத்தின் முடிவு என்பது என்ன? (வேதாகமம் கூறுகின்றது நாம் சிலகாலம் இப்பூமியில் வசிப்போம். இயேசு திரும்ப வந்து அனைவரையும் நியாயந்தீர்ப்பார். அதுவே உலகத்தின் முடிவு).
பிறர் செய்த குற்றங்களைச் சுட்டிக் காட்டுவது நமது வேலையா? (இல்லை. அனைவருடைய குற்றங்களையும் குறித்து தீர்ப்புச் செய்வது தேவனுடைய வேலை).




www.ChildrenAreImportant.com – Children's ministry resources, Sunday School, and Vacation Bible School (VBS) curriculum for churches and teachers. Tamil

# விளையட்டு



**தேவையான பொருட்கள்**
வேதாகமம், பெரிய துண்டுகள்
**விளையாடும் முறை**
1. 5 பேர் கொண்ட குழுக்கள் அமைக்கவும். ஒவ்வொரு குழுவுக்கும் ஒரு துண்டும் பந்தும் கொடுக்கப்பட வேண்டும்.
2. அவர்களில் 4 பேர் துண்டின் மூலைகளைப் பிடித்துக் கொள்ளவும். 5ம் நபர் பந்தினை துண்டுக்கு நேரே வீசும்போது, நான்கு பேரும் துண்டால் பந்தினைப் பிடிக்க முயற்சிக்கவும். பந்தைப் பிடித்தவுடன் அவர் நான்கு பேரில் ஒருவராக வந்துவிடட்டும். முதல் நான்கு பேரில் ஒருவர் பந்தினை எறியும் இடம் சென்று பந்தை எறிந்து விளையாட்டினைத் தொடருவர்.
3. இவ்வாறு பந்து எறிவதும் பிடிப்பதும் தொடரும். எத்தனை முறை பந்து பிடிப்பட்டது என்பது கணக்கிடப்பட்டு “நல்ல விதை” என்ற சொற்றொடரின் ஒரு எழுத்து பந்தைப் பிடிக்கும் ஒவ்வொரு தருணத்திலும் பரிசாக வழங்கப்படும்.
4. முதலில் 5 முறை பந்தைப் பிடிக்கும் குழு “நல்ல விதை” என்ற சொற்றொடர் பெற்று “முடித்து விட்டோம்” என்று கூற வேண்டும்.

**கூடுதலான யோசனைகள்**
1. முடிந்தவரை திறந்தவெளியில் விளையாடவும்.
2. பந்தை எறியும் இடத்திற்கும் துண்டு பிடிக்கப்படும் இடத்திற்கும் இடைப்பட்ட தூரம் சிறுவர்களின் வயதுக்கேற்ப மாறலாம்.
3. ஒரு குழுவில் 5 பேருக்கு அதிகமானோர் இருப்பின், பந்து எறிவோர் வரிசையில் நின்று, சுழற்சி முறையில் பந்து வீசும் தருணம் பெறுவர்.

# விடைகள்

## வார்த்தை விளையாட்டு

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பி | டு | ங் | கு | த | ல் | இ | ே | ய | சு | வ |
| உ | எ | ெ | வி | ே | அ | ன | க | க | ப | ள |
| நி | ே | வ | ை | ல | க் | க | ா | ர | ன் | ர் |
| த் | ச | அ | த | ா | எ | த | து | ம | ட | த |
| தி | ர் | று | த் | வி | தி | க | ை | ள | த | ல் |
| ை | த் | ப் | த | ை | ரி | ை | ம | ந | ச | வ |
| ர | த | பு | ல் | த | க | ள | ஞ் | சி | ய | ம் |
| ந | ல் | ல | எ | ப | ர | ே | ல | ா | க | ம் |

## நடுநிலையானது

வார்த்தை விளையாட்டு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ன | க | ப | க | ள | ஞ் | சி | ய | ம் | ன |
| ா | த | ர | ை | உ | எ | ெ | வ | ே | அ |
| ம | ட | ே | ள | க | ப | ா | ள | அ | று |
| ந | ல் | ல | த | ம | ட | ந | ர் | ன | ப் |
| ல | இ | ா | ச | வ | வி | ை | த | ப் | பு |
| ர | ே | க | ா | து | ை | ம | ல் | ன | க |
| ை | ய | ம் | உ | எ | த | ப | ா | த | ம |
| டி | சு | யீ | ெ | ே | அ | ன | க | ப | ா |



## மிகவும் கடினமானது

### இரகசிய தகவல்

தேவனே நன்மைக்கும் ங்
தீமைக்கும் உள்ள
வித்தியாசத்தை
பார்த்து முடிவில் நீதியை
நிலை நாட்டுவார் என்பதை
நான் அறிய வேண்டும்

வார்த்தை விளையாட்டு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ன | க | ப | க | ள | ஞ் | சி | ய | ம் | ன |
| ா | த | ர | ை | உ | எ | ெ | வ | ே | அ |
| ம | ட | ே | ள | க | ப | ா | ள | அ | று |
| ந | ல் | ல | த | ம | ட | ந | ர் | ன | ப் |
| ல | இ | ா | ச | வ | வி | ை | த | ப் | பு |
| ர | ே | க | ா | து | ை | ம | ல் | ன | க |
| ை | ய | ம் | உ | எ | த | ப | ா | த | ம |
| டி | சு | யீ | ெ | ே | அ | ன | க | ப | ா |

## கடினமானது

### இரகசிய தகவல்

நன்மைக்கும்
தீமைக்கும் உள்ள
வித்தியாசத்தை
தேவனே
பார்க்கக்கூடும்




## எளிதானது

மாணவர்கள் அந்த வாரத்திற்குரிய ஸ்டிக்கரை வெட்டி எடுக்கவும். பின்னர் ஸ்டிக்கரை அந்த வாரத்திற்குரிய பாடப்பகுதியில் புள்ளியிடப்பட்டு குறிக்கப்பட்ட இடத்தில் ஒட்டவும். முழு பக்கத்தையும் வர்ணம் தீட்டவும்.






# 3 கடுகு விதை

**வேதாகமப் பகுதி:** மத்தேயு 13:31-32
**மனப்பாட வசனம்:** "...பரலோகராஜ்யம் கடுகுவிதைக்கு ஒப்பாயிருக்கிறது; அதை ஒரு மனுஷன் எடுத்துத் தன் நிலத்தில் விதைத்தான். அது சகல விதைகளிலும் சிறியதாயிருந்தும், வளரும்போது, சகல பூண்டுகளிலும் பெரியதாகி..." மத்தேயு *13:31-32*
**வீட்டுப் பாடம் அதிகாரங்கள்:** கடினமானது - மத்தேயு 5
மிகவும் கடினமானது - மத்தேயு 7-9

## முக்கிய பாடம்

இந்த உவமையில் பரலோக ராஜ்யத்தை இயேசு மிகச் சிறிய கடுகு விதைக்கு ஒப்பிடுகிறார். மிகப் பெரிய ஒன்றுடன் மிகச் சிறிய ஒன்றினை எவ்வாறு ஒப்பிட முடியும்? இயேசு பிறந்தபோது மேசியா என்பவர் மாபெரும் அரசான, அநேக பணியாட்களுடன், குதிரைமேல் வருவார் என எதிர்பார்த்தனர். தங்கள் தேசத்தின் அரசனாக மேசியா இருப்பார் எனவும் எதிர்நோக்கினர். மாறாக, அவரோ தாழ்மையுள்ள பாலகனாகப் பிறந்தார். ஒரு அரசன் பிறக்கக்கூடிய நல்ல மருத்துவமனை ஒன்றிலோ, வசதிமிக்க விடுதியிலோ அவர் பிறக்கவில்லை. சீஷர்கள் அவரைப் பின்பற்றத் தொடங்கிய நாட்களில், அநேகர் அவரைப் பின்செல்ல வேண்டும் என நினைத்தனர். ஆனால் ஏழ்மையான பன்னிருவர் மட்டுமே அவருடனிருந்தனர். உங்கள் பட்டணத்துடன் ஒத்துப் பார்த்தால் உங்கள் சபை அல்லது ஆலயம் எவ்வளவு பெரியது? அநேக இடங்களில் சபைகள் சிறியதாக உருவாகின்றன. மிகச் சிலரே அங்கமாயுள்ள நிலையில், அவர்கள் நாங்கள் மெய்யான ஒரே தேவனைப் பின்பற்றும் "கிறிஸ்தவர்கள்" என்று எழுந்து நிற்கின்றனர்.
உங்கள் சபையின் அளவு உங்களைத் தாழ்த்துவதில்லை. உங்கள் சபை கிறிஸ்துவின் சரீரத்தின் ஓர் அங்கமாகும் (உலகமெங்குமுள்ள சபைகளின் தொகுதியே கிறிஸ்துவின் சரீரம்). அது வளரும். மிகப் பெரிய மரமாகி இயேசுவே வழி, சத்தியம், ஜீவன் என்பதை அறியும்படியிருக்கும். உங்கள் பள்ளியிலும்கூட தேவனை விசுவாசியாதோர் ஒரு நாளில் பரலோக ராஜ்யத்தின் உண்மைமைய அறிந்து கொள்வார்கள். இப்போது அவர்கள் அதைக் காணவில்லை. ஏனெனில் அது மிகச் சிறிய கடுகின் அளவாகவேயிருக்கும். அதையே தேவனும் விரும்புகிறார். ஆனால் ஒரு நாளில் நகரங்கள், பட்டணங்கள், மாநிலம், நாடு அனைத்திலும் உள்ள பள்ளி மாணவரும் கிறிஸ்துவே தேவன் என்பதைக் காண்பார்கள்.

## பாட உதவி

ஒரு கேமராவும் சில குடும்பப் படங்களும். (படங்களைச் சிறுவர்களுக்கு காண்பித்து குடும்பங்களைப் பற்றிப் பேசும்போது படங்களின் அழகைப் பாராட்ட வேண்டும்). எவற்றை படமாக்க முடியும் என்றும் எவற்றை முடியாது என்றும் சிறுவர்களிடம் கேட்கவும். (எ.காட்டு காற்று, தேவன், அன்பு முதலியன). காணக் கூடாத அநேகம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தன என்பதை சிறுவர்களிடம் கூறவும்.



## கேள்விகள்

மேசியா வரும் விதம் பற்றி இஸ்ரவேலர்கள் என்ன நினைத்தனர்? (பல வேலையாட்களை உடைய அரசன், ஒரு பெரிய அரசியல்வாதி, எக்காளம் ஊத பெருந்தொனியுடனும் பவனியாக வருவார் என்று நினைத்தனர்).
இவ்வுவமையில் கடுகு விதை எதற்கு ஒப்பிடப்பட்டுள்ளது? (தேவனுடைய ராஜ்யம்)
தேவனுடைய ராஜ்யம் என்பது என்ன? (ஆவிக்குரிய உலகில் தேவனே அரசன், மேலும் உலகமெங்குமுள்ள கிறிஸ்தவர்கள் அந்த ராஜ்ய வாசிகள்)
உங்கள் பள்ளியில் கிறிஸ்தவர்கள் எத்தனை பேர்? பள்ளியில் மொத்தம் எத்தனை பேர்? முடிவில் எத்தனை பேர் கிறிஸ்துவை ராஜா என்று கண்டுகொள்வர்? (அனைவரும்)


www.ChildrenAreImportant.com – Children's ministry resources, Sunday School, and Vacation Bible School (VBS) curriculum for churches and teachers. Tamil

# விளையட்டு

**தேவையான பொருட்கள்**
பெரிய தாள், மார்க்கர், நாணயங்கள், தாள், எழுதுகோல்கள்.
**விளையாட்டிற்கு ஆயத்தம்:**
பெரிய தாளில் ஒரு மரத்தை வரையவும். அதைப் பல பாகமாகப் பிரித்து ஒவ்வொரு பாகத்திற்கும் ஒரு எண் கொடுக்கவும். விளையாட்டு இடத்தில் தரையில் அப்படத்தை வைத்துவிடவும்.
**விளையாடும் விதம்**
1. குழுவிற்கு 3 அல்லது 4 பேர் என பிரிக்கவும். ஒவ்வொரு குழுவும் மரம் வரையப்பட்ட தாளைச் சுற்றி 1 மீட்டர் தூரத்தில் நிற்கவும். ஒவ்வொரு குழுவிற்கும் ஒரு நாணயம், தாள், எழுதுகோல் தரவும்.
2. ஆசிரியர் 30க்கு மேலான ஒரு எண்ணை மனதில் நினைக்கவும். தங்கள் கையிலுள்ள நாணயத்தை முறைப்படி ஒவ்வொருவராக மரத்தின் மீது போட வேண்டும். மரத்தின் எப்பகுதியில் நாணயம் விழுகிறதோ அப்பகுதியிலுள்ள எண் ஒவ்வொருவர் எறியும் போதும் சேர்க்கப்பட்டு தங்கள் அணி பெற்றுள்ள புள்ளியைக் கணக்கிட வேண்டும்.
3. ஆசிரியர் மனதில் வைத்த எண் நிறைவடையவும் விளையாட்டு நிறுத்தப்படும். ஆசிரியர் மனதில் வைத்த எண்ணைக் கூறியபின் அதற்கு சமப்புள்ளி பெற்ற குழு வென்றது. வென்ற குழுவிலுள்ள ஒருவர் காணப்படுபவைகளைப் பார்க்கிலும், பரலோக ராஜ்யம் மிகப் பெரியது என அடுத்தவரிடம் கூறுவர். மனதில் வைக்கும் எண்ணை மாற்றி மீண்டும் விளையாடலாம்.

**கூடுதலான ஆலோசனைகள்**
1. நாணயங்களுக்குப் பதிலாக கனமான அட்டையைத் துண்டுகளாக வெட்டி பயன்படுத்தலாம்.
2. பெரிய பிள்ளைகள் விளையாடும் போது, எண்களுக்குப் பதிலாக ‘கடுகு விதை’ என்ற சொற்றொடர் எழுத்துக்கள் எழுதி வைக்கலாம். நாணயத்தை மரத்தின் பல பகுதிகளில் போட்டு “கடுகு விதை” என்ற சொற்றொடரை பூர்த்தி செய்யும் குழு தேவனுடைய மகத்துவத்தை மற்ற சிறுவர்களுக்கு கூறலாம்.
3. வயதில் சிறுவருக்கு 10-20க்குள்ளான எண்ணை மனதில் நினைக்கவும். சிறிய மரத்தை வரையவும்.



# விடைகள்

## புதிர்



## நடுநிலையானது

### புதிர்





## மிகவும் கடினமானது

### இரகசிய தகவல்

தே வ னா ல் சி றி ய
பொ ரு ட் க ளு ம்
பெ ரி தா கு ம் எ ன் ப தை
நா ன் அ றி ய வே ண் டு ம்

### புதிர்



## கடினமானது

### இரகசிய தகவல்

தே வ னா ல்
சி றி ய
பொ ரு ட் க ளு ம்
பெ ரி தா கு ம்

ஃ க

3



## எளிதானது

மாணவர்கள் அந்த வாரத்திற்குரிய ஸ்டிக்கரை வெட்டி எடுக்கவும். பின்னர் ஸ்டிக்கரை அந்த வாரத்திற்குரிய பாடப்பகுதியில் புள்ளியிடப்பட்டு குறிக்கப்பட்ட இடத்தில் ஒட்டவும். முழு பக்கத்தையும் வர்ணம் தீட்டவும்.






www.ChildrenAreImportant.com – Children's ministry resources, Sunday School, and Vacation Bible School (VBS) curriculum for churches and teachers. Tamil

# 4 ஈஸ்ட்

**வேதாகமப் பகுதி:** மத்தேயு 13:33-35
**மனப்பாட வசனம்:** "பரலோகராஜ்யம் புளித்தமாவுக்கு ஒப்பாயிருக்கிறது." மத்தேயு *13:33*
**வீட்டுப் பாடம் அதிகாரங்கள்:** கடினமானது - மத்தேயு 6
மிகவும் கடினமானது - மத்தேயு 10-12




## முக்கிய பாடம்

ஈஸ்ட் என்பது சிறு விதை போன்ற பொருள். ஆனால் அது மாவில் போடப்படும்போது, மிக ருசியுள்ள ரொட்டி உருவாகும்படி மாவைப் புளிக்கப்பண்ணும். நமக்குள்ளிருக்கும் வேத வசனத்தை இது குறிக்கின்றது. அது மிகச் சிறிய அளவில் தொடங்குகின்றது. நாம் அதற்கு இணங்கி நடந்தால் அது பெருகி நமது வாழ்வை நிரப்பும். மாவில் இடப்பட்ட ஈஸ்ட் பெருகி நல்ல ரொட்டி உண்டாக உதவுகிறது. அதைப்போன்றே தேவ ராஜ்யமும் நமது இருதயத்தில் தொடங்கி நம்மில் கிரியை செய்கிறது. நாம் அணியும் துணிபோல, வர்ணங்கள் போல தோற்றமளிக்கும் எதையும் போல வெளிப்படையாகப் பயன்படுத்தப்படும் ஒன்றல்ல. தேவ ராஜ்யம் நமக்குள் இருக்கிறது. தேவன் நம்முள் செயல்பட விடும்போது, அது நமது வாழ்க்கையை ஆசீர்வதிக்கிறது.

நீங்கள் எதை அறிந்திருக்கிறீர்கள் என்று அறியும்வரை உங்கள் மாணவர்களுக்கு கவலையில்லை.

## பாட உதவி

ரஸ்னா போன்ற பானம் தயாரிக்கும் பொருளினை ரொட்டிக்குப் பதிலாக எடுக்கவும். ஒரு லிட்டர் தண்ணீரை ஈஸ்ட்க்குப் பதிலாக எடுக்கவும். தண்ணீர் நிறமுள்ள கலவையாக மாறுவதை சிறுவர் காண முடியும்.

## கேள்விகள்

தேவனால் நிரப்பப்பட்ட வாழ்வு யாருக்குத் தேவை? (யோசித்து விடை தர நேரம் தரவும்)
இதை எவ்வாறு பெற்றுக் கொள்ள முடியும்? (தேவனுக்குப் பிரியமான சிறு காரியங்களை வாழ்வில் அனுமதிக்கும்போது அது பெருகி வளரும்)
உவமைகள்மூலம் இயேசு கூறின மறைவான பொருட்கள் எப்போதிலிருந்து வெளிப்படுத்தப்பட்டது? (உலகத் தோற்றமுதல்)

## கூடுதலான யோசனைகள்

வினிகர் நிறைந்த கண்ணாடி டம்பிளரை எடுக்கலாம். ஒரு தாளில் "ஈஸ்ட்" என எழுதி டம்பிளரில் ஒட்டலாம். மற்றொரு கிண்ணத்தில் சோடா மாவு போட்டு அதில் 'மாவு' என்று எழுதவும். சிறுவர்களிடம் இவை என்ன என்பதைக் கூற வேண்டாம் (ஆர்வத்தைக் குறைக்காதிருக்க).

வினிகரை சோடா மீது ஊற்றி விளைவை கவனிக்கவும்.

நீங்கள் கரிசனையோடு இருப்பதை சிறுவர்கள் அறியும் வரை நீங்கள் எதை அறிந்துள்ளீர்கள் என்பதைக் குறித்து அவர்கள் அக்கறைப்படுவதில்லை.'





www.ChildrenAreImportant.com – Children's ministry resources, Sunday School, and Vacation Bible School (VBS) curriculum for churches and teachers. Tamil

# விளையட்டு

**தேவையான பொருட்கள்:**
பெரிய பலூன் (ஒவ்வொருவருக்கும் குறைந்தது 2)

**விளையாடும் முறை**

1. சிறுவரிடம் ஒரு பலூன் கொடுத்து சிறிது ஊதி கட்டிவிடவும். மிக அதிகமாக 6 பேரடங்கிய குழுக்களாக வட்டமாக அமரவும். சிறிது ஊதப்பட்ட பலூன்கள் மீது அமர வேண்டும். ஒவ்வொரு குழுவிற்கும் இன்னொரு பலூனைக் கொடுக்கவும். (நன்கு ஊதப்பட்டு கட்டப்பட்டது).
2. முழுவதும் ஊதப்பட்ட பலூனை 10 முறை தங்கள் வட்டத்தில் கடத்த வேண்டும். ஆனால் தாங்கள் உட்கார்ந்திருக்கும் பலூன் வெடித்து விடாதபடி பார்த்துக்கொள்ள வேண்டும். முழுதும் ஊதப்பட்ட பலூன் வெடித்தாலோ, தரையில் விழவிடப்பட்டாலோ அடுத்த ஒன்றைக் கொடுத்து ஆட்டத்தைத் தொடரவும்.
3. பலமுறை விளையாடின பின், எந்தக் குழு அதிக நேரம் பலூனைத் தரையில் விடாமல் காத்தது என பார்க்கவும். வென்ற குழுவுக்கு “உவமை” என்ற சொல்லின் ஒரு எழுத்து பரிசாக அளிக்கவும். ‘உவமை’ என்ற சொல்லை முழுவதுமாக பெறும் வரை விளையாட்டு தொடரும். அல்லது உங்கள் விருப்பப்படி ஆட்டத்தை முடிக்கலாம்.

**கூடுதலான ஆலோசனைகள்**

1. பலூன் மீது அமராமலும் விளையாடலாம்.
2. விளையாட்டை இன்னும் சற்று கடினமாக்க ஒரு பலூனுக்கு பதிலாக இரண்டு கொடுத்து சிறுவர்களிடம் கடத்தச் சொல்லலாம். பலூன் கடத்தும் போது சில வேதாகம வசனங்களைக் கூறலாம். கைகளை உபயோகிப்பதற்குப் பதிலாக முழங்கை, தலை, கால், இவற்றால் பலூனை உந்தித் தள்ளலாம்.
3. தரையில் கோடு வரைந்து, கைப் பந்தாட்டம் போல விளையாடலாம். இரு அணியும் கோட்டின் இருபுறமும் அமர்ந்து கைப்பந்து சட்டங்களின்படி ஆடலாம்.



# விடைகள்

## மிகவும் கடினமானது

### இரகசிய தகவல்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ே | த | வ | னு | ை | ட | ய |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| இ | ர | ா | ஜ் | ய | த் | தி | ல் |

| | | | |
|---|---|---|---|
| சி | றி | து | ம் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ெ | வ | கு | தூ | ர | ம் |

| | | | | |
|---|---|---|---|---|
| ெ | ச | ல் | லு | ம |

| | | | | |
|---|---|---|---|---|
| எ | ன் | ப | ை | த |

| | | |
|---|---|---|
| ந | ா | ன் |

| | | |
|---|---|---|
| அ | றி | ய |

| | | | | |
|---|---|---|---|---|
| ே | வ | ண் | டு | ம் |

▽ ள்

### வார்த்தை விளையாட்டு

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தீ | ர் | க் | க | த | ரி | சி | எ | உ | அ | ப |
| உ | இ | ர | ா | ஜ் | ய | ம் | ெ | வ | ன | ா |
| சி | ே | பு | த | ம | ா | வு | ே | ை | க | த |
| ரு | ய | ளி | பி | ை | ச | ந் | த | ம | ா | வு |
| ஷ் | சு | த் | ம | ற | ட | ந | ச | வ | ல | ர |
| டி | ெ | த | ப | ெ | ை | டி | க | யீ | உ | எ |
| ப் | ே | ம | ா | ப | ர | ே | ல | ா | க | ம் |
| பு | அ | ா | வ | ா | ய் | த | ந் | ந | ச | வ |
| கூ | ட் | ட | ம் | ரு | ட | வ | து | ல | ர | ை |
| ன | க | ப | ா | ள் | த | ன் | ம | ஸ் | தி | ரீ |

## கடினமானது

### இரகசிய தகவல்

| | | | |
|---|---|---|---|
| சி | றி | து | ம் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ெ | வ | கு | தூ | ர | ம் |

| | | | | |
|---|---|---|---|---|
| ெ | ச | ல் | லு | ம் |

### வார்த்தை விளையாட்டு

மாவு
பரலோகம்
இராஜ்யம்
ஸ்திரீ
பிசைந்த மாவு
உவமை

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| உ | ப | எ | ெ | ம | ா | வு |
| இ | ர | ா | ஜ் | ய | ம் | ம |
| ந | ே | ே | அ | ன | க | ஸ் |
| ச | ல | ட | உ | ப | ா | தி |
| வ | ா | ந | வ | த | ம | ரீ |
| ல | க | பி | ை | ச | ந் | த |
| ர | ம் | ை | ம | ா | வு | ா |

## நடுநிலையானது

### வார்த்தை விளையாட்டு

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| உ | ப | எ | ெ | ம | ா | வு |
| இ | ர | ா | ஜ் | ய | ம் | ம |
| ந | ே | ே | அ | ன | க | ஸ் |
| ச | ல | ட | உ | ப | ா | தி |
| வ | ா | ந | வ | த | ம | ரீ |
| ல | க | பி | ை | ச | ந் | த |
| ர | ம் | ை | ம | ா | வு | ா |



4



## எளிதானது

மாணவர்கள் அந்த வாரத்திற்குரிய ஸ்டிக்கரை வெட்டி எடுக்கவும். பின்னர் ஸ்டிக்கரை அந்த வாரத்திற்குரிய பாடப்பகுதியில் புள்ளியிடப்பட்டு குறிக்கப்பட்ட இடத்தில் ஒட்டவும். முழு பக்கத்தையும் வர்ணம் தீட்டவும்.



www.ChildrenAreImportant.com – Children's ministry resources, Sunday School, and Vacation Bible School (VBS) curriculum for churches and teachers. Tamil




# புதைத்திருக்கிற பொக்கிஷமும் நல்ல முத்தும்

**வேதாகமப் பகுதி:** மத்தேயு 13:44-46

**மனப்பாட வசனம்:** “அவன் விலையுயர்ந்த ஒரு முத்தைக்கண்டு, போய், தனக்குண்டான எல்லாவற்றையும் விற்று, அதைக் கொள்ளுகிறான்.” மத்தேயு *13:46*

**வீட்டுப் பாடம் அதிகாரங்கள்:** கடினமானது - மத்தேயு 7
மிகவும் கடினமானது - மத்தேயு 13-14

## முக்கிய பாடம்

இவ்விரண்டு கதைகளும் விலைமதிப்புள்ள ஒன்றைக் கண்டுபிடித்த மனிதரைப் பற்றியது. பிறர் யாரும் காணாத விலையேறப் பெற்ற ஒன்றை ஒரு நிலத்தில் ஒருவன் கண்டான். தனது ஆஸ்தி எல்லாவற்றைக் காட்டிலும் கூடுதல் மதிப்புள்ள அப்புதையலைப் பெற தனது எல்லா ஆஸ்தியையும் விற்க முற்பட்டான். மற்றொருவன் விலையேறப்பெற்ற முத்து ஒன்றைக் கண்டான். தனது உடைமைகள் அனைத்தினையும்விட, மேலான மதிப்புள்ள அந்த முத்து தனது வாழ்வுக்குத் தேவை என எண்ணினான். இவை பரலோக ராஜ்யத்தின் பெருமதிப்பினைக் காட்டுகின்றன.

பரலோக ராஜ்யத்தில் இவ்வுலகிலுள்ள எல்லா செல்வத்தையும் விட மேலான பொக்கிஷத்தை நீயும் நானும் காணலாம். அதைப் பெற இங்குள்ள யாவற்றையும் இழக்க நாம் ஆயத்தமாயிருக்க வேண்டும். பெரிய ஞானியான ஜிம் எலியட் ‘தான் இழக்கக் கூடாத ஒன்றைப் பெறுவதற்காக, தான் வைத்துக் கொள்ளக் கூடாத ஒன்றை இழப்பவன் முட்டாளல்ல’ என்று கூறியுள்ளார்.

பிரச்சினை என்னவெனில் அழியும் உலகப் பொருளைப்பெற உழைக்கும் மனிதர் நித்திய வாழ்வைப் பெற ஆர்வமற்றுள்ளனர் என்பதே. இன்று நாம் கற்கும் உவமைக்கு மாறுபட்டே உலகம் செயல்படுகின்றது. நம்மைச் சுற்றியுள்ளோர் நம்பாததை நாம் நம்புவது கடினமாயுள்ளது. எனவேதான் இதை மறைந்துள்ள பொக்கிஷம் என நாம் நம்ப வேண்டியதிருக்கிறது. சுற்றியுள்ள எவரும் அதைக் காணவில்லை. ஆனால் பரலோக ராஜ்யத்தைப்பெற அனைத்தையும் விற்றுவிடுவது ஏற்புடையது என தேவன் இன்று ஞாபகப்படுத்துகிறார்.

## பாட உதவி

கடிதம் அல்லது மின்னஞ்சல். சிறுவர்கள் யாரெல்லாம் கடிதம், மின்னஞ்சல், செய்திக் குறிப்பு அல்லது நண்பருடன் இணையதளத்தில் உரையாட அனுபவம் பெற்றவர்கள் எனக் கேட்டறியவும். தேவனிடமிருந்து ஒரு மின்னஞ்சல் பெறுவது எத்தனை இன்பகரமான காரியம் என்று அவர்களிடம் பேசவும். சிறுவர்களுக்கு தேவனிடமிருந்து ஒரு மின்னஞ்சல் வந்துள்ளது என்று கூறுங்கள். ஏதாவது ஒரு வேதாகமப் பகுதியை வாசியுங்கள். வேதாகமம் தேவன் நமக்கு அனுப்பின கடிதம்; நாம் அதை ஒரு பொக்கிஷமாகப் பெற்றிருக்கிறோம் என்று கூறுங்கள்.



## கேள்விகள்

உங்களுக்குள்ளதையெல்லாம் இழப்பது சரிதானா? ஏன்? (ஏனெனில் இறுதியில் எப்படியும் அனைத்தையும் இழக்கவே போகிறோம்)
தேவராஜ்யத்தைப் பெற அனைத்தையும் இழப்பது ஞானமுள்ள செயல். ஏன்? (ஏனெனில் அது மிகவும் விலையேறப் பெற்றது. ஒருவராலும் திருடிக் கொள்ளக் கூடாததாயுமுள்ளது)
எந்த இரு காரியங்களும் மாறுபட்டவை என வேதாகமம் கூறுகிறது? (தேவ ராஜ்யமும் உலக காரியமும்)



www.ChildrenAreImportant.com – Children's ministry resources, Sunday School, and Vacation Bible School (VBS) curriculum for churches and teachers. Tamil

# விளையட்டு

சிறுவர்கள் மத்தியில் வேலை செய்வதில் நித்திய மதிப்பு உள்ளது.

ஆண்டவருடைய வழியில் சிறுவர்களை நடத்துவது நம் கடமை.

**தேவையான பொருட்கள்**
வேதாகமம், சிறு நாணயங்கள், கண்ணாடித் தாள் பைகள்.

**விளையாட்டுக்கு ஆயத்தம்**
விளையாடும் இடத்தில் ஒரு சிறுவனுக்கு 2 நாணயங்கள் என்ற கணக்கில் ஒளித்து வைக்கவும். விளையாடும் முறை இருவர் அடங்கிய அணிகளாகப் பிரிக்க வேண்டும். தங்களுக்கு மட்டுமே தெரிந்த இரகசியக் குறிகளைத் தெரிந்து கொள்ளவும். (எ.கா. மூன்றுமுறை கைதட்டல், ஒரு வார்த்தையை உயர்ந்த தொனியில் கூறிக் கொண்டிருப்பது, ஒரு விசில் சத்தம்). குழுவிலுள்ள ஒருவர் புதையலைத்தேட, அடுத்தவர் சுவரருகே பையுடன் நிற்க வேண்டும். ஆட்டம் தொடங்கப்பட்டதும், முதல் சிறுவன் புதையலைத் தேடுகிறான். ஒரு நாணயம் கண்டதும் அவன் அதை எடுக்கக் கூடாது. இரகசியக் குறியை அவன் எழுப்பி தனது சக தோழனை அழைக்க வேண்டும். உடனே அடுத்தவன் வேகமாக வந்து அந்த நாணயத்தைப் பெற்று தனது பையில் போட்டுக் கொள்ளலாம். எல்லாருமே ஒரு நாணயம் கண்டெடுக்கும்வரை விளையாட்டைத் தொடரலாம். சிறுவர்களை இடம் மாற்றி, திரும்பவும் விளையாட வைக்கவும்.

**கூடுதலான யோசனைகள்**
1. தாங்கள் எடுத்த புதையல்களை எண்ணிப் பார்த்து வெற்றியைக் கணக்கிடவும். வென்ற குழுவை அழைத்து, பாடத்திலுள்ள வசனத்தை வாசிக்கச் செய்யலாம்.
2. உண்மை நாணயங்களுக்குப் பதிலாக சாக்லேட் நாணயங்களை பயன்படுத்தலாம்.



# விடைகள்

## மறைந்திருக்கும் வார்த்தை



## நடுநிலையானது

### மறைந்திருக்கும் வார்த்தை



## மிகவும் கடினமானது

### இரகசிய தகவல்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| கி | றி | ஸ் | து | வி | ற் | க | ா | க |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| எ | ல் | ல | ா | வ | ற் | றை | ற | யு | ம் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| வி | ட் | டு | வி | டு | வ | து |

| | | | |
|---|---|---|---|
| ஏ | ற் | ற | து |

| | | | | |
|---|---|---|---|---|
| எ | ன் | ப | தை | த |

| | | |
|---|---|---|
| நா | ா | ன் |

| | | |
|---|---|---|
| அ | றி | ய |

| | | | | |
|---|---|---|---|---|
| வே | வ | ண் | டு | ம் |

### மறைந்திருக்கும் வார்த்தை



## கடினமானது

### இரகசிய தகவல்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| கி | றி | ஸ் | து | வி | ற் | க | ா | க |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| எ | ல் | ல | ா | வ | ற் | றை | ற | யு | ம் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| வி | ட் | டு | வி | டு | வ | து |

| | | | |
|---|---|---|---|
| ஏ | ற் | ற | து |

5





## எளிதானது

மாணவர்கள் அந்த வாரத்திற்குரிய ஸ்டிக்கரை வெட்டி எடுக்கவும். பின்னர் ஸ்டிக்கரை அந்த வாரத்திற்குரிய பாடப்பகுதியில் புள்ளியிடப்பட்டு குறிக்கப்பட்ட இடத்தில் ஒட்டவும். முழு பக்கத்தையும் வர்ணம் தீட்டவும்.



www.ChildrenAreImportant.com – Children's ministry resources, Sunday School, and Vacation Bible School (VBS) curriculum for churches and teachers. Tamil

# 6 காணாமற் போன ஆடு




**வேதாகமப் பகுதி:** மத்தேயு 18:10-14

**மனப்பாட வசனம்:**“இவ்விதமாக, இந்தச் சிறியரில் ஒருவனாகிலும், கெட்டுப்போவது பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவின் சித்தமல்ல.” மத்தேயு *18:14*

**வீட்டுப் பாடம் அதிகாரங்கள்:** கடினமானது - மத்தேயு 8
மிகவும் கடினமானது - மத்தேயு 15-16

# முக்கிய பாடம்

ஒவ்வொரு நபரும் தேவன் பார்வையில் பெருமதிப்புடையோர் என்பதே இவ்வுவமையில் நாம் காணும் உண்மையாகும். நாம் காணாமற் போயிருப்போமெனில், தேவன் தம்முடையோரை விட்டு விட்டு நம்மைக் கண்டுபிடிக்கும் படி வருகிறார் என்பது, நாம் ஒவ்வொருவரும் அவருக்கு அருமையானோர் என்பதைக் காண்பிக்கிறது. ஆனால் 10, 14 வசனங்களில் குறிப்பிட்டுள்ள ‘சிறியவர்கள்’ என்னுஞ்சொல் சிறு குழந்தைகளைக் குறிக்கும் என அநேகர் எண்ணுகின்றனர். தேவன் சிறுவர்மீது அன்பும் கரிசனையுமிக்கவராதலால் நாமும் அவர்களின் பெருமதிப்பினை உணர்ந்து கொள்ள வேண்டும். நாம் சிறுவர்களை அற்பமாக எண்ணக்கூடாது என்பது ஒரு முக்கியமான கருத்தாகும். தமது சீஷராகிய பெரியோரிடம் சிறுவர்களை அற்பமாக எண்ணாதிருக்கும்படி தேவன் கூறினார். மேலும் நம்மைக்காட்டிலும் சிறுமைப்பட்டோராய், துடிப்பற்றோராய், அழகிற் குறைந்தோராய் இருப்போரை நாம் அலட்சியம் செய்யக் கூடாது என நம்மிடம் சொல்லுகிறார் என்பதை நம்புகிறீர்களா? அன்றியும் ஆவிக்குரிய வாழ்வில் காணாமற் போனவர்களாயிருப்போரைப்பற்றி கரிசனையுடையவர்களாயிருப்பது இன்றியமையாததாகும். அவர்கள் தவறு செய்யும் போதும், தேவனுக்கு மறைந்து வாழ்ந்து கொண்டிருக்கும் போதும், பெற்றோரைவிட்டுத் திரியும் போதும், ஆலயத்திற்கு வராமலிருக்கும் போதும், பொய் பேசும் போதும் காணாமற்போனோர் என்று கூறப்படுவர். நாம் அவருக்கு அருமையானவர்களாகையால் அவரை விட்டு அலைந்து திரியும்போது அவர் நம்மைத்தேடி வருகிறார். நாம் அனைவரும் தேவனுக்கு மிக அருமையானவர்கள்.

# பாட உதவி

புதிர்கள் சிறுவர்களுக்குப் பிடிக்குமா என கேட்கவும். சரியாக அடுக்கப்பட்ட புதிர் அட்டையைக் காண்பிக்கவும். அவற்றில் ஒன்று காணாமற் போய்விட்டது. (அச்சிறு துண்டினை வகுப்பறையில் எங்காகிலும் மறைத்து வைக்கவும்) காணாமற் போன அச்சிறு துண்டு மற்றவற்றைக் காட்டிலும் முக்கியத்துவமுள்ளதுதானா என கேட்கவும். (இல்லை) காலியாயுள்ள இடத்தை வேறு ஒரு அட்டைத்துண்டினால் நிரப்ப முயலவும் (அது பொருந்தாது). காணாமற்போன அத்துண்டினைத் தேடி எடுக்கும்படி கூறுங்கள். நம்மில் ஒவ்வொருவரும் தேவனுக்கு முக்கியமானவர்கள் என்று சொல்லுங்கள்.



# கேள்விகள்

நீங்கள் தேவனை விட்டுப் பிரிந்து சென்றுவிட்டால் அவர் என்ன செய்வார்? (அவர் உங்களைத் தேடுவார்)
தேவன் யாரிடம் அதிக கரிசனையுடனிருக்கிறார்? (சிறுவரிடம்)
உங்களைச் சூழ்ந்துள்ளோரில் உங்களைக்காட்டிலும் சிறியோர் யார்?
யாரெல்லாம் தேவனுக்கு முக்கியமானோர்? (ஒவ்வொருவரும்)
உங்கள் தம்பி தங்கைக்கு உதவும்படி நீங்கள் என்ன செய்யலாம்? (அவர்கள் வீட்டுப்பாடம் செய்து முடிக்க, உடைகளை மாற்ற, தெருக்களைக் கடக்க, பலகாரங்கள் தயாரிக்க அவர்களுக்கு உதவலாம்)
இந்த உவமையில் மக்கள் எதற்கு ஒப்பிடப்பட்டுள்ளனர்? (ஆடுகளுக்கு)


www.ChildrenAreImportant.com – Children’s ministry resources, Sunday School, and Vacation Bible School (VBS) curriculum for churches and teachers. Tamil

உங்கள் வகுப்பில்
உள்ள மாணவர்களை
விட்டுவிடாதிருங்கள்.

# விளையட்டு



**பொருட்கள்**

கத்தரிக்கோல், நூல், அளப்பதற்கான ஒரு உபகரணம் விளையாட ஆயத்தம் செய்தல்

நூலை வெவ்வேறு நீளத்தில் வெட்டவும். 20 முதல் 30 செ.மீ. நீளத்தில் வெட்டவும். ஒரு பிள்ளைக்கு குறைந்தது 3 துண்டுகள் இருக்கட்டும். வகுப்பறையிலோ, வெளியிலோ அவற்றை மறைத்து வைக்கவும்.

**விளையாடும் முறை**

1. 3 அல்லது 4 குழுக்களாக வகுப்பைப் பிரிக்கவும்.
2. ஆசிரியர் விளையாட்டைத் தொடங்கி வைக்கவும். உடனே பிள்ளைகள் மறைத்து வைக்கப்பட்ட நூலிழைகளைத் தேடத் தொடங்குவர். ஒவ்வொரு குழுவும் மறைத்து வைக்கப்பட்ட நூலிழைகளைத் தேடத் தொடங்குவர். ஒவ்வொரு குழுவும் தாங்கள் தேடி எடுத்த துண்டுகளை இணைத்து நீளமாகக் கட்ட வேண்டும்.
3. எல்லா நூல் துண்டுகளும் கண்டெடுக்கப்பட்ட பின் எந்தக் குழுவின் நூல் அதிக நீளமென அளந்து காணவும்.

**மேலும் சற்று சிறப்பாகச் செய்ய**

1. கூடிய வரை வகுப்பறையை விட்டு வெளியே விளையாடலாம்.
2. ஒவ்வொரு குழுவிலும் ஒன்று அல்லது இரண்டு நபர்கள் நூல் கட்டும் வேலை செய்யட்டும். மற்றவர்கள் நூலைத் தேடிக்கொண்டு வரட்டும்.
3. இறுதியில் தங்கள் கையிலுள்ள நீள நூலினில், பாடப்பகுதியின் ஒரு வார்த்தையை உருவாக்க ஊக்கப்படுத்தலாம்.

# விடைகள்



## புதிர்



## மிகவும் கடினமானது

### இரகசிய தகவல்

இ

| | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ந | ா | ன் | | ே | த | வ | னு | க் | கு | | | | |
| வி | ே | ச | ஷி | த் | த | வ | ன் | | எ | ன் | ப | தை | த |
| ந | ா | ன் | | அ | றி | ய | | ே | வ | ண் | டு | ம் | |

## புதிர்



## கடினமானது

### இரகசிய தகவல்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ந | ா | ன் | | | | | |
| ே | த | வ | னு | ச் | கு | | |
| வி | ே | ச | ஷி | த் | த | வ | ன் |

## நடுநிலையானது

### புதிர்





6



## எளிதானது

மாணவர்கள் அந்த வாரத்திற்குரிய ஸ்டிக்கரை வெட்டி எடுக்கவும். பின்னர் ஸ்டிக்கரை அந்த வாரத்திற்குரிய பாடப்பகுதியில் புள்ளியிடப்பட்டு குறிக்கப்பட்ட இடத்தில் ஒட்டவும். முழு பக்கத்தையும் வர்ணம் தீட்டவும்.




# 7 இரக்கமற்ற ஊழியக்காரன்

**வேதாகமப் பகுதி:** மத்தேயு *18:21-35*

**மனப்பாட வசனம்:** “நான் உனக்கு இரங்கினதுபோல, நீயும் உன் உடன்வேலைக்காரனுக்கு இரங்கவேண்டாமோ.”மத்தேயு *18:32b-33*

**வீட்டுப் பாடம் அதிகாரங்கள்:** கடினமானது - மத்தேயு 12
மிகவும் கடினமானது - மத்தேயு 17-18

## முக்கிய பாடம்

